மே – 06

# TNPSC துளிகள்

- பார்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் தலைவர் சுனில் பாரதி மிட்டல் உலக வங்கி மேற்கொள்ளும் தனியார் துறை முதலீட்டு ஆய்வக (PSIL) முன்னெடுப்பில் இணைந்து உள்ளார்.
- இந்தியாவில், தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான மற்றும் வணிக ரீதியான சுரங்கங்களின் நிலக்கரி உற்பத்தியானது, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 14.01 மில்லியன் டன் (MT) ஆக பதிவாகியுள்ளது, அதே நேரத்தில் நிலக்கரி ஏற்றுமதியானது 16.81 மில்லியன் டன் (MT) ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா மாநில அமைச்சரவையானது, 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 6,600 கோடி ரூபாய் முதலீட்டை இலக்காகக் கொண்டு, 2025 ஆம் ஆண்டு கப்பல் கட்டுதல், கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் கப்பல் மறுசுழற்சி கொள்கையினை அங்கீகரித்துள்ளது.
- பாபுஜி மகாராஜின் 125வது பிறந்தநாளை நினைவு கூரும் வகையில் ஐதராபாத் அருகே உள்ள கன்ஹா சாந்தி வனத்தில் பாபுஜி வனம் எனப்படும் உலகின் முதல் ஆற்றல் மாற்றம் அம்சங்கள் கொண்ட தோட்டமானது திறக்கப் பட்டுள்ளது.
- சர்வதேச அறிவியல் சமூகமானது, இந்தியப் பெருங்கடலின் மீதான மிகவும் நீண்டகால கண்காணிப்புகளை மேற்கொள்வதற்காக வேண்டி கடலடிக் கம்பிவட முன்னெடுப்பு முயற்சியை மேற்கொள்வதற்காக இந்தியத் தேசியப் பெருங்கடல் தகவல் சேவைகள் மையத்தினை (INCOIS) தேர்ந்தெடுத்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கப்பல் கட்டுதல் துறைக்கான முதல் கொள்கை




- தமிழக நிதியமைச்சர் மாநிலத்தின் முதல் ‘2025 ஆம் ஆண்டு கடல் போக்குவரத்து உற்பத்தி கொள்கையினை’ வெளியிட்டுள்ளார்.

- இந்தக் கொள்கையானது, கப்பல் மற்றும் படகு வடிவமைப்பு, கப்பலின் மூடக உற்பத்தி மற்றும் கப்பல் இயந்திர உற்பத்தியில் முதலீடு மற்றும் புதுமைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் கப்பல் கட்டும் சந்தையில் மிக கணிசமான பங்கைக் கைப்பற்றுவதற்கு மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது என்ற நிலையில் இது 2033 ஆம் ஆண்டிற்குள் 8 பில்லியன் டாலர்களைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- கடலூர் மற்றும் தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தொழில்துறைகள் விரைவில் நிறுவப் படும்.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் முன்னெப்போதும் பதிவாகாத வெப்பமான ஆண்டு 2024

**HEAT RECORD** (All India figures for 2024)

| Rank* | Month | Mean temp anamoly** | Rank* | Month | Mean temp anamoly** |
|---|---|---|---|---|---|
| 24 | January | 0.34 | 4 | August | 0.45 |
| 16 | February | 0.40 | 2 | September | 0.76 |
| 26 | March | 0.22 | 1 | October | 1.23 |
| 8 | April | 0.76 | 3 | November | 0.84 |
| 4 | May | 0.69 | 6 | December | 0.42 |
| 8 | June | 0.91 | 1 | Annual | 0.65 |
| 2 | July | 0.70 | | | |

- 2024 ஆம் ஆண்டில், வருடாந்திர சராசரி நில மேற்பரப்பு காற்று வெப்பநிலையானது நீண்ட கால சராசரியை விட (1991-2020) +0.65 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருந்தது.
- 1901 ஆம் ஆண்டில் நாடு முழுவதுமான வெப்பநிலைப் பதிவுகள் தொடங்கப் பட்டதில் இருந்து பதிவான மிகவும் வெப்பமான ஆண்டு இதுவேயாகும்.
- இது 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட +0.54 டிகிரி வெப்பநிலையை விட அதிகம் ஆகும்.
- கிழக்குக் கடற்கரையின் பெரும்பாலான பகுதிகளில், ஏப்ரல் மாதத்தில் வெப்ப அலை சூழல்கள் காணப்பட்டன அதே நேரத்தில் மே மாதத்தில், அவை வடமேற்கு இந்தியா முழுவதும் பரவலாக நிலவின.
- ஜூன் மாதத்தில், வடக்கு மற்றும் மத்திய இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் வெப்ப அலைகள் நிலவின.
- 2024 ஆம் ஆண்டில், நவம்பர் மாதத்தின் அதிகபட்ச மாதாந்திர வெப்பநிலையானது, 1901 ஆம் ஆண்டிற்குப் பிறகு நாடு முழுவதும் பதிவான இரண்டாவது அதிகபட்ச வெப்ப நிலையாகும்.

## வாக்காளர்களை மையமாகக் கொண்ட மூன்று புதிய சீர்திருத்தங்கள்


- இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, வாக்காளர் பட்டியல்களின் துல்லியத்தினை மேம்படுத்துவதையும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதையும் நோக்கமாகக்

கொண்ட ஒரு நடவடிக்கையை அறிவித்துள்ளது.

- இந்த முக்கிய முன்னெடுப்புகளில் பின்வருபவை அடங்கும்
    - இறப்புச் சான்றிதழ்களின் எண்ணிம வழி ஒருங்கிணைப்பு,
    - வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளுக்குப் புகைப்பட அடையாள அட்டைகளை வழங்குதல், மற்றும்
    - சிறப்பான தெளிவுக்காக மறுவடிவமைப்பு செய்யப்பட்ட வாக்காளர் தகவல் சீட்டு.
- இந்த நடவடிக்கைகள் வாக்காளர் பட்டியல்களின் மீதான நம்பகத்தன்மையை நன்கு வலுப்படுத்துவதையும், தேர்தல் செயல்முறை முழுவதும் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.




## பேரிடர் மேலாண்மை மேற்பார்வை தொடர்பான உயர் மட்டக் குழு




- 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் தொடர்பான விவகாரங்களை மேற்பார்வையிடுவதற்கு மத்திய உள்துறை அமைச்சர் தலைமையில் ஓர் உயர் மட்டக்

குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

- 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் (2005 ஆம் ஆண்டு சட்டத்தின் 53) 8Bவது பிரிவின் (2)வது துணைப்பிரிவில் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இது கொள்கை சார் முடிவுகளை வழிநடத்தும் மற்றும் பேரிடர் காலங்களில் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களிடையே ஒருங்கிணைந்த முயற்சிகளை உறுதி செய்யும்.

## 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் பாக்டீரியத் தொற்றுகள்

**TOP FIVE DEATH CAUSING BACTERIA IN INDIA**

| Pathogen | Death counts in 2019 | Death rate per 100,000 population, 2019 |
|---|---|---|
| E.Coli | 1.6 lakh | 16.1 |
| S-Pneumoniae | 1.4 lakh | 14.4 |
| K-Pneumoniae | 1.3 lakh | 13.2 |
| S-Aureus | 1.2 lakh | 12.8 |
| A-Baumannii | 1.1 lakh | 11 |

- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் பதிவான பாக்டீரியத் தொற்றுகளில் எட்டு சதவீதம் மட்டுமே சரியான முறையில் சிகிச்சையளிக்கப்பட்டன.
- இதில் ஆய்வு நடத்தப்பட்ட எட்டு நாடுகளில் சுமார் 15 லட்சம் பாக்டீரியத் தொற்றுகள் கார்பபெனெம்ஸ் எனும் ஒரு நுண்ணுயிர் கொல்லி மருந்திற்கு எதிர்ப்புத் திறனைக் கொண்டுள்ளன.
- கார்பபெனெம்ஸ் என்பது கடுமையான பாக்டீரியத் தொற்றுக்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்தாகும்.
- சுமார் 7.8 சதவீத நோய்த்தொற்றுகள் மிக முறையாக சிகிச்சையளிக்கப்பட்டதுடன், இந்தியா பெரும்பாலான சிகிச்சை தொகுப்புகளை (80.5 சதவீதம்; 83,468 தொகுப்புகள்) வாங்கியது.
- ஆண்டுதோறும் 1.1 மில்லியன் உயிரிழப்புகள் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பின் (AMR) நேரடி விளைவாக ஏற்பட்டதாகும்.
- இது 2022 ஆம் ஆண்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் மலேரியாவால் ஏற்பட்ட மொத்த உயிர் இழப்புகளை விட அதிகமாகும்.


## 'Ageing with Dignity' நிகழ்ச்சி

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது, 'Ageing with Dignity- முதியோர்களின் நலனுக்கான முன்னெடுப்புகள்' நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தது.
- இந்த நிகழ்வின் போது, முதியோர்களின் நலனை நோக்கமாகக் கொண்ட பல முக்கிய முன்னெடுப்புகளை அது தொடங்கியது.
- இந்த நிகழ்ச்சியில் முதியோர்கள் நல இணைய தளமும் தொடங்கப்பட்டது மேலும் முதியோர் இல்லங்களின் காணொளி வழி திறப்பு விழா, உதவி மற்றும் துணை

சாதனங்கள் வழங்கல் ஆகியவையும் இந்த நிகழ்வில் இடம் பெற்றன.


❖ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறைக்கும் பிரம்ம குமாரிகள் அமைப்புக்கும் இடையே தலைமுறைகளுக்கிடையிலான பிணைப்பு, முதியோர்களின் ஒட்டு மொத்த நல்வாழ்வு ஆகியவற்றிற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

❖ இது முதியோர், சமூக அமைப்புகள், பள்ளிக் குழந்தைகள் மற்றும் ஆன்மீகத் தலைவர்களை ஒன்றிணைத்து முதியவர்களை மதித்து கௌரவிக்கும் இந்தியாவின் பாரம்பரிய நெறிமுறைகளை மீண்டும் உறுதிப்படுத்தியது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### முதலாவது 'கருந்துளையின் மாபெரும் ஆற்றல் வெளியேற்ற' நிகழ்வின் ஒப்புரு




❖ ஆராய்ச்சியாளர்கள் 'கருந்துளையின் மாபெரும் ஆற்றல் வெளியேற்ற' நிகழ்வின் முதல் ஆய்வக ஒப்புரு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

❖ இது கட்டுப்படுத்தக்கூடிய வேகத்தில், அதனைச் சுற்றி சுழலும் காந்தப்புலங்களை உருவாக்கும் விதமாக சுருள் அடுக்குகளுக்குள் வைக்கப்பட்ட ஒரு சுழலும் அலுமினிய உருளையைக் கொண்டுள்ளது.


❖ 1972 ஆம் ஆண்டில், இயற்பியல் அறிஞர்களான வில்லியம் பிரஸ் மற்றும் சௌல் டியூகோல்ஸ்கி ஆகியோர் கருந்துளையின் மாபெரும் ஆற்றல் வெளியேற்றம் எனப்

படும் ஒரு கோட்பாட்டு அளவிலான நிகழ்வை விவரித்தனர்.

- 1969 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் கணித இயற்பியலாளரும் நோபல் பரிசு பெற்றவருமான சர் ரோஜர் பென்ரோஸ் சுழலும் கருந்துளையிலிருந்து ஆற்றலைப் பிரித்தெடுக்கும் ஒரு வழியை முன்மொழிந்தார்.
- இது கருந்துளையின் மிகை ஆற்றல் வெளியீடு என்று அறியப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## எலும்பு சேகரிப்பான் கம்பளிப்பூச்சி




- தன் இரையின் எச்சங்களை அணிந்திருக்கும் ஒரு புதிய மாமிச உண்ணி கம்பளிப் பூச்சி இனமானது "எலும்பு சேகரிப்பான்" என்று அழைக்கப் படுகிறது.
- இந்த விசித்திரமான பூச்சி ஹவாய் தீவான ஓஹுவில் மட்டுமே காணப்படுகிறது.
- இது சிலந்தி வலைகளில் ஊர்ந்து சென்று, அதில் சிக்கிய பூச்சிகளை உண்டு, அதன் பட்டு போன்ற இழை உறையை அவற்றின் உடல் பாகங்களில் அணிகிறது.
- அவை லைக்கன், மணல் மற்றும் பிற பொருட்களால் மூடப்பட்டப் பாதுகாப்பு உறைகளைப் பின்னுவதற்கு என்று பட்டுச் சுரப்பிகளைப் பயன்படுத்துகின்றன.
- இது தான் எறும்புத் தலைகள் மற்றும் ஈ இறக்கைகள் ஆகியவற்றை முதன்முதலில் பயன்படுத்தியது.
- ஹவாயில் காணப்படும் எலும்பு சேகரிப்பான் இனங்கள் ஒன்றையொன்று சாப்பிடும் இனமாகும்.
- எலும்பு சேகரிப்பான் இனங்களின் தோற்றம் ஆனது குறைந்தது சுமார் 6 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையதாக கருதப்படுகிறது இதனால் இது ஹவாய் தீவுகளை விட பழமையானதாக குறிப்பிடப்படுகிறது.

# மாநிலச் செய்திகள்

## அமராவதி திட்டம் 2025 மறுதொடக்கம்

- இந்தியப் பிரதமர், ஆந்திரப் பிரதேசத்தில் ஒரு பசுமைத் தலைநகரான அமராவதியின் கட்டுமானப் பணிகளின் மறு தொடக்கம் உட்பட 58,000 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார்.


- 2014 ஆம் ஆண்டில் ஆந்திரப் பிரதேசம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அமராவதி புதிய தலைநகராக நியமிக்கப்பட்டது.
- 'பிரஜா ராஜதானி' அல்லது "மக்களின் தலைநகரம்" என்று அழைக்கப்பட உள்ள அமராவதியானது, நிர்வாகத்திற்கான ஒரு கருப்பொருளுடன் கூடிய சுமார் ஒன்பது கருப்பொருள் சார் துணை நகரங்களைக் கொண்டிருக்கும்.
- அமராவதியானது சூரிய, காற்று மற்றும் நீர்வளங்களில் இருந்து 2,700 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், உலகின் முதல் முழுமையாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியால் இயங்கும் நகரமாக மாற உள்ளது.
- அனைத்து அரசு வீடுகள் மற்றும் முக்கியக் கட்டிடங்களிலும் மேற்கூரை சூரிய சக்தி உற்பத்தி அமைப்புகள் நிறுவப்படும்.
- மெட்ரோ இரயில் பாதைகள் மற்றும் மின்சாரப் பேருந்துகள் உள்ளிட்ட அனைத்துப் பொது போக்குவரத்து வசதிகளும் தூய்மை ஆற்றலில் இயங்கும்.
- மிகவும் அதிகளவு திறன்மிகு கட்டமைப்புகள், போக்குவரத்து மேலாண்மை மற்றும் IoT அடிப்படையிலான பல சேவைகள் அதன் உள்கட்டமைப்பில் ஒருங்கிணைக்கப் பட்டு உள்ளதுடன் அமராவதி சீர்மிகு நகரமாக கருத்தாக்கப்பட்டுள்ளது.




## மகாராஷ்டிராவில் பண்டைய நாகரிகம்

- நாக்பூர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மகாராஷ்டிர மாநிலத்தின் யவத்மால் மாவட்டத்தில் சுமார் 3,000 ஆண்டுகள் பழமையான நாகரிகத்தின் எஞ்சிய பகுதிகள் என்று கருதப்படுகின்ற பகுதிகளைக் கண்டறிந்துள்ளனர்.
- இங்கு கண்டெடுக்கப்பட்ட கலைப்பொருட்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆனது, சுமார் 3,000 ஆண்டுகள் பழமையான நாகரிகத்தின் எச்சங்களைக் குறிக்கின்றன.
- சுண்ணாம்புக்கல் தரையுடன் கூடிய விளிம்புகளில் மர தூண்கள் கொண்ட வட்ட வடிவ வீடுகளின் கட்டமைப்பு எச்சங்களை இக்குழு கண்டறிந்தது.
- இங்கு கண்டெடுக்கப்பட்ட பல்வேறு மட்பாண்டங்கள் மற்றும் கலைப்பொருட்களின் எச்சங்களின் அடிப்படையில் இவற்றின் கலாச்சார வரிசையானது இரும்பு காலம் என்பதுடன் தொடங்குகிறது.

- அதைத் தொடர்ந்து சாதவாகனர் காலம், இடைக்காலத்தினைச் சேர்ந்த பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன என்பதோடு பின்னர் அது நிஜாம் காலத்தில் ஒரு கண்காணிப்பு நடவடிக்கைக்கான பகுதியாகப் பயன்படுத்தப்பட்டது.




## விழிஞ்சம் சர்வதேச துறைமுகம்




- கேரள மாநிலத்தின் விழிஞ்சத்தில் இந்தியாவின் முதலாவது ஆழ்கடல் போக்குவரத்து துறைமுகத்தினை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இது இந்தியாவின் முதல் ஆழ்கடல் கொள்கலன் போக்குவரத்து துறைமுகமாகும்.
- மேலும் இது இந்தியாவின் முதல் பசுமை வழியான மற்றும் மித தானியங்கி வகையான துறைமுகம் ஆகும்.

- இங்கு சரக்குக் கொள்கலன்கள் அவற்றின் இறுதி இலக்கை அடைவதற்கு முன்பு ஒரு கப்பலில் இருந்து மற்றொரு கப்பலுக்கு மாற்றப்படுகின்றன.
- இது வரை இந்தியாவில் ஆழ்கடல் கொள்கலன் பரிமாற்றத் துறைமுகம் இல்லை.
- இந்தியா ஆண்டுதோறும் கொள்கலன் பரிமாற்றத்திற்காக 200 முதல் 220 மில்லியன் டாலர் (1,682-1,850 கோடி ரூபாய்) செலவிடுவதாக கூறப்படுகிறது.
- இந்தத் துறைமுகம் ஆனது, பெரிய தானியங்கி CRMG (Cantilever Rail Mounted Gantry) பளு தூக்கிகளை இயக்குவதற்காக ஒன்பது பெண்களை, குறிப்பாக உள்ளூர் மீன்பிடிச் சமூகத்தைச் சேர்ந்தப் பெண்களைப் பணியமர்த்தியுள்ளது.
- எந்தவொரு இந்தியத் துறைமுகத்திலும் பெண்கள் இது போன்ற ஒரு இயந்திரங்களை இயக்குவது இதுவே முதல் முறையாகும்.

## ஜார்க்கண்ட் மாநில அரசின் OBC தரவுகள் சேகரிப்பு

**THE TRIPLE TEST**

- Dedicated OBC commission should be engaged in a full time exercise to map OBC community presence
- State's OBC Commission and Election Commission required to conduct rigorous, thorough and contemporary study of the nature and extent of backwardness on OBC communities in each village panchayat
- The sum total of all reservations shouldn't go over 50%


- ஜார்க்கண்ட் மாநில அரசானது, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் (OBC) மக்கள் தொகை குறித்த தரவுகளைச் சேகரித்து முடித்துள்ளது.
- இந்த தரவுச் சேகரிப்பு ஆனது "மும்முறை தேர்வின்" முதல் படியின் ஒரு பகுதியாகும்.
- மும்முறை தேர்வு என்பது உள்ளாட்சி அமைப்புகளில் OBC ஒதுக்கீடுகள் நியாயமான மற்றும் அரசியலமைப்பு முறையில் தீர்மானிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக உச்ச நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட மூன்று படிநிலை வழிகாட்டுதலாகும்.
- "மும்முறை தேர்வு" என்று அழைக்கப்படுபவற்றின் மூன்று படிநிலைகள் பின்வருமாறு.
    - உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட நிலையின் தன்மை மற்றும் தாக்கங்கள் குறித்து கடுமையான அனுபவம் சார் விசாரணையை நடத்துவதற்கு ஒரு பிரத்தியேக ஆணையத்தினை அமைத்தல்;
    - அவ்வாணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளில் தேவைப்படும் இட ஒதுக்கீட்டின் ஒரு விகிதத்தைக் குறிப்பிடுவதன் மூலம் அதிகப் படியான அளவு ஒதுக்கீடு செல்வதைத் தடுக்கலாம்; மற்றும்
    - SC/ST/OBC பிரிவுகளுக்கான இட ஒதுக்கீடானது மொத்த இடங்களில் 50 சதவீதத்தை தாண்டாமல் இருப்பதை உறுதி செய்தல்.
- ஜார்க்கண்ட் மாநிலத்தில், இந்த OBC பிரிவுகள் சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப் பட்ட BC-I (பிற்படுத்தப்பட்ட வகுப்பு I) மற்றும் ஒப்பீட்டளவில் சிறந்த நிலையில் உள்ள BC-II (பிற்படுத்தப்பட்ட வகுப்பு II) வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

- தற்போது, இந்த BC-I பிரிவின் கீழ் 127 சாதிகளும், BC-II பிரிவின் கீழ் சுமார் 45 சாதிகளும் உள்ளன.
- மஹதோ/மஹதோ சாதியின் ஒரு துணைக்குழுவான குட்மி சமூகம், மிகப்பெரிய OBC சமூகமாகும்.

# முக்கிய தினங்கள்

## நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் தினம் 2025 - மே 04

- நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களின் தியாகங்கள் மற்றும் மிக கடின உழைப்பை அங்கீகரிப்பதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நகரங்கள், வணிகங்கள் மற்றும் வீடுகளுக்கு எரிசக்தி வழங்குவதில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களின் முக்கியப் பங்கை இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- நிலக்கரி சுரங்கத் தொழிலில் ஈடுபடும் மக்கள் எதிர்கொள்ளும் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பிற சவால்கள் பற்றிய விழிப்புணர்வையும் இது எழுப்புகிறது.
- 1952 ஆம் ஆண்டு சுரங்கச் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் இந்த நாள் நிறுவப்பட்டது.
- 1774 ஆம் ஆண்டில், ஜான் சம்மர் மற்றும் சூட்டோனியஸ் கிராண்ட் ஹீட்லி ஆகியோர் இந்தியாவின் முதல் நிலக்கரிச் சுரங்கத்தை நிறுவினர்.




# இதரச் செய்திகள்

## 11 சாதவாகனர் கால கல்வெட்டுகள்

- இந்தியத் தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவானது தெலுங்கானாவின் பெத்தப் பள்ளி மாவட்டத்தில் உள்ள குண்டாரம் காப்புக் காடுகள் என்ற பகுதியில் பதினொரு கல்வெட்டுகளை ஆவணப்படுத்தியுள்ளது.
- இது கி.மு. 1 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக் கட்டத்தைச் சேர்ந்தது.
- இந்தக் கல்வெட்டுகளானது தக்காணத்தின் ஆரம்பகாலக் கலாச்சார மற்றும் அரசியல் நிலப் ரப்பு பற்றிய, குறிப்பாக சாதவாகனர் காலத்தைக் குறிக்கின்ற மிக முக்கியமான

தகவல்களை வழங்குகின்றன.


- ❖ குண்டாரம் குடைவரையிலிருந்து இரண்டு கல்வெட்டுகள் அவற்றின் மிக வரலாற்றுச் சிறப்பிற்காக பெரும் தனித்துவமாகக் கருதப்படுகின்றன.
- ❖ ஆரம்பகாலப் பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்ட ஒரு கல்வெட்டானது, ஹரிதிபுத்ர வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் (சூது வம்சத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம்) புத்தத் துறவிகளுக்காக ஒரு குகையை உருவாக்கியதாகக் கூறுகிறது.
- ❖ தென்னிந்தியாவில் ஆரம்பகாலக் கல்வெட்டுகளுடன் இதுபோன்ற சமயச் சின்னங்கள் இருப்பது இதுவே முதல் முறையாகும்.

**CHUTU (CUTU) DYNASTY**

- **Time Period:** Circa 200–300 CE
- **Region Ruled:** Kuntala Rajya (modern-day Karnataka)
- **Capital:** Banavasi
- **Political Status:** Subordinate to Satavahanas and some scholars consider them independent due to use of royal title "Rājño" on coins.
- **Notable Kings:** Cuṭukulānanda Sātakarṇi I & II, Muḍānanda, Śivalānanda
- The dynasty was eventually absorbed by the Kadambas.
- Despite rich archaeological evidence, historical details remain scarce.



## முதலாம் விக்ரமாதித்யன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு




- ❖ கர்நாடகாவின் தாவங்கேர் மாவட்டத்தில் உள்ள நியாமதி தாலுக்காவில் உள்ள மாட புரா என்ற ஏரியில் பதாமி சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த முதலாம் விக்ரமாதித்யன் காலத்தைச் சேர்ந்த ஓர் அரிய கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

- தோராயமாக ஐந்து அடி நீளம் கொண்ட இந்தக் கல்வெட்டு ஆனது, பழைய கன்னட எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட 17 வரிகளைக் கொண்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டு ஆனது கி.பி 7 ஆம் நூற்றாண்டை, குறிப்பாக கி.பி. 654 முதல் 681 ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்த பதாமி சாளுக்கியர்களின் மன்னனான முதலாம் விக்ரமாதித்யனின் ஆட்சிக் காலத்தினைச் சேர்ந்தது.
- பல்லாவி பகுதியை ஆட்சி செய்த முதலாம் விக்ரமாதித்யனின் அரசு அதிகாரியான சிங்கவென்னா உள்ளூர் கிராமவாசிகள் மீது சில வரிகளைத் தள்ளுபடி செய்ததை இந்தக் கல்வெட்டு விவரிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★